**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**<u>எஸ்.டி.சி.எண்</u>:1045/2015**

**அ.சா: 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | சித்ரா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சின்னசாமி |
| ஊர் | : | சந்தம்பட்டி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | விவசாயம் |
| மதம் | : | |
| வயது | : | 40 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.28.05.2024.**

**2 முதல் 7 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சந்தம்பட்டி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 6-வது எதிரி சின்னசாமி எனது கணவர். மற்ற எதிரிகளும் எங்கள் ஊரை சேர்ந்தவர். எங்கள் வீட்டில் இருந்து சுமார் 100 அடி தூரத்தில் முத்து மாரியம்மன் கோவில் உள்ளது. மேற்படி கோவிலுக்கு போவதற்க்கு வழி சம்மந்தமாக கடந்த 2015-ம் வருடம் பிரச்சனை ஏற்ப்பட்டு வாய்தகராறு ஏற்ப்பட்டது. சிவலிங்கம் என்பவர் எனக்கு சித்தப்பா முறையாகும் அவர் கோவிலுக்கு செல்ல வழிவிடமுடியாது என்று பிரச்சனை செய்தார். மேற்படி சிவலிங்கம் நீதிமன்றத்தில் உள்ள எதிரிகளிடம் பிரச்சனை செய்து கொண்டு இருந்தார். நான் வீட்டில் இருந்து சத்தம் கேட்டு வந்தபோது அங்கிருந்து ஒரு ஒருவராக கலைந்து சென்றனர். பிரச்சணையில் என்ன நடந்தது என்ற விவரம் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகேட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கோவிலுக்கு செல்லும் வழியில் எங்களுக்கும் நிலம் உள்ளது. நாங்களும் வழி விடுவதாக சொல்லியிருந்தோம். இருப்பக்கம் உள்ளவர்களும் வழிவிடுவதாக சொல்லி சாலை போடுவதற்க்கு ஆயுத்தம் செய்தார்கள். அவ்வாறு சாலை போடும்போது ஒரு பிரிவினர் இடம் தரமுடியாது என கூறியதால் பிரச்சனை ஏற்ப்பட்டது. சிவலிங்கம் வகையறாக்கள் இடம் தரமுடியாது என்று கூறினார்கள். அதனால் சிவலிங்கம் வகையறாக்கும், எதிரிகளுக்கும் வாய் தகராறு ஏற்ப்பட்டது. வாய்தகராறில் இருதரப்பினரும் தகாத வார்த்தைகளால் திட்டி கொண்டார்கள் என்று சொன்னால் நான் அப்போது சம்பவ இடத்திற்க்கு வரவில்லை அதனால் எனக்கு தெரியாது. இருதரப்பிற்க்கும் சண்டை நடைப்பெற்றதால் சிவலிங்கம், மாரிமுத்து, சந்தானலட்சுமி, பாலசுப்ரமணி, ரகுவரன் ஆகியோர்களுக்கு காயம் ஏறிப்பட்டது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**இல்லை**

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/— எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**எஸ்.டி.சி.எண்:1045/2015**

**அ.சா: 2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரவிக்குமார் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சின்னசாமி |
| ஊர் | : | சந்தம்பட்டி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | மெக்கானிக் |
| மதம் | : | |
| வயது | : | 37 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.28.05.2024.**

**2 முதல் 7 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சந்தம்பட்டி கிராமத்தில் வசித்து மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். எங்கள் ஊர் முத்து மாரியம்மன் கோவிலுக்கு சென்று வர கொடி வழிப்பாதை இருந்தது, மேற்படி வழிக்கு இருப்பக்கம் உள்ளவர்களின் நிலங்களின் வழியாக கோவிலுக்கு செல்ல வழிப்பாதை அமைப்பது குறித்து பேசியபோது ஒரு தரப்பினர் ஒப்புக் கொண்டனர், ஒரு தரப்பினர் வழி கொடுக்க மறுத்துவிட்டனர். எதிரிகள் காத்தவராயன், பாலசுப்ரமணியன் ஆகியோர்கள் அவர்கள் நிலத்தில் வழி அமைக்க ஒப்புக்கொண்டனர். ஆனால் சிவலிங்கம் என்பவர் ஒப்புக்கொள்ளவில்லை. அப்போது எதிரிகளுக்கும் சிவலிங்கம் தரப்பினருக்கும் இடையே சண்டை ஏற்பட்டு அதில் சிலருக்கு காயம் ஏற்பட்டது, அடிப்பட்டவர்களை மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். அந்த சம்பவத்திற்க்கு பிறகு போலீசார் சம்பவம் நடந்த இடத்திற்க்கு வந்து சண்டை நடந்த சுற்றியுள்ள இடங்களை பார்த்து வரைப்படம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும்

பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதாகும். **பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் எங்கள் ஊரை சேர்ந்த சரவணன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதின் பெயரில் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**எஸ்.டி.சி.எண்:1045/2015**

**அ.சா: 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | சரவணன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | கோவிந்தராஜ் |
| ஊர் | : | சந்தம்பட்டி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | வியாபாரம் |
| மதம் | : | |
| வயது | : | 50 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.28.05.2024.**

**2 முதல் 7 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சந்தம்பட்டி கிராமத்தில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். சிவலிங்கம் ஒரு தரப்பிலும், எதிரிகள் ஒரு தரப்பிலும் வழி சம்மந்தமாக பிரச்சனை ஏற்ப்பட்டது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதாகும். மேற்படி கையெழுத்தை மத்தூர் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதின் பெயரில் போட்டுக் கொடுத்தேன். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகேட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கோவிலுக்கு செல்வதற்க்காக பாதையை ஊர்காரர்கள் இருதரப்பு உள்ளவர்கள் நிலத்தை வாங்கி சாலை போடுவதற்க்காக முயற்சி செய்தார்கள். அப்போது ஒரு தரப்பினர் வழி கொடுக்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் எதிரிகளுக்கும், சிவலிங்கம் தரப்பினருக்கும் வாய் தகராறு ஏற்ப்பட்டதை நான் கேள்விப்பட்டேன். மேற்படி வழி தகராறை பாலசுப்ரமணி, சந்தானலட்சுமி, சிவலிங்கம், மாரிமுத்து, ரகுவரன் ஆகியோர்களுக்கு காயம்பட்டது எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் வழக்கு பதிவு செய்து போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் வரைப்படம் தயார் செய்தார்கள் என்றும் அதற்க்கு ஆதராவாக நான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதின் பெயரில் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/— எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.